635

635
3-49

ஸ்ரீ:

ஆழ்வார்களருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களிலும் அவற்றின் வியாக்கியானங்களிலும் குறை கூறினவர்களுக்கு விடை

பெருமையும் பொருமையும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 SEP 1949
MADRAS

M. பார்த்தஸாரதி,
31-A, நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை.

மதராஸ்
பிரேமா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா 3

1949

Q22:417
N49
78382

ஸ்ரீ:

ஆழ்வார்களருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்களிலும் அவற்றின் வியாக்கியானங்களிலும் குறை கூறினவர்களுக்கு விடை

பெருமையும் பொறுமையும்

M. பார்த்தஸாரதி,
31, A. நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 SEP 1949
MADRAS

மதராஸ்
பிரேமா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா 3

1949

Q22:417
N49
8A
2-47

ஸ்ரீः

ஆழ்வார்கள் ஆசாரியர்கள் திருவடிகளே சரணம்.

பெருமையும் பொருமையும்.

இதைக் காணும்போதே யாருடைய பெருமையில் யார்க்குப் பொருமையென்று ஐயுறுவர்கள் அனைவரும்; இதனைச் சிறிதளவு வாசித்தால் எல்லாம் செவ்வனே விளங்கி விடும்.

வைணவ சம்பிரதாயத்தில் வைத்தமாநிதியாகக் கொண்டு குலாவப்படுகின்ற ஆழ்வார்களது திவ்வியப்பிரபந்தங்களில் புறமதத்தவர்களுக்குப் பலவகைக் காரணங்களினால் பொருமை அந்நாள் தொடங்கியேயுண்டு. அப்பிரபந்தங்களுக்கு வாய்த்த உலகறி பெருமைகளை முன்னம் விளக்குவாம்.

(1) அரிய பெரிய வியாக்கியானங்கள் (உரைகள்) ஆழ்வார்களின் பிரபந்தங்கட்கு அமைந்தனவென்பது.

(2) வடமொழி வேத வேதாந்தங்களில் மிக்க வல்லமை பெற்ற அந்தணர்மரபில் தோன்றிய பேராசிரியர்களும் அந்த வட மொழி வேதத்தையுந் தள்ளி இப்பிரபந்தங்களையே உயர்ந்த வேதமாகக் கொண்டு இவற்றின் அனுபவத்திலேயே போதுபோக்கிவந்து, இன்னமும் பரம்பரையாக அப்படியே போது போக்கிவருகின்றார்களென்பது.

(3) விஷ்ணுவாலயங்களில் சிறியவை பெரியவை யென்கிற வாசியில்லாமல் ஸகல ஆலயங்களிலும் கிருஹங்களிலும் மடங்களிலும் எந்த இடங்களிலும் பூஜைச்சடங்கு வைதிகச்சடங்குதோறும் இப்பிரபந்தங்களை முக்கியமாகக் கொண்டாடிவருகிறார்களென்பது.

(4) இப்பிரபந்தங்களைப்பாடிய ஆழ்வார்களையும் இவற்றுக்கு [illegible]களியற்றிய ஆசாரியர்களையும் அநாதிகாலமாகவே விக்[illegible]ாகவைத்துப் பூஜித்து, பகவானுக்குப்

78382

போலவும் பகவானுக்கு மேற்படவும் இவர்களுக்கு உத்ஸவாதிகள் நடத்தி வருகிறார்களென்பது.

(5) இப்பிரபந்தங்களை வைணவர்கள்யாவரும் பெரும்பான்மையாகக் கண்டபாடஞ்செய்து பெரியதிரளாக, விண்ணுலகில்நின்றும் இங்குவந்த நித்தியசூரிகளோ இவர்கள்! என்று யாவரும் வியக்கும்படி கண்ணையும் நெஞ்சையும் கவர்கின்ற கோலத்துடன் காட்சிதந்து ஆச்சரியமாகப் பாராயணகோஷ்டிகளை நடத்தி விசேஷமரியாதைகளையுமடைந்து வருகிறார்களென்பது

(6) "அந்தமிலா மறையாயிரத் தாழ்ந்தவரும் பொருளைச், செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும், தந்தம் விழாவு மழகுமென்னும்? தமிழார்கவியின், பந்தம் விழா வொழுகுங் குருகூர்வந்த பண்ணவனே.' என்று (சடகோபரந்தாதியில்) கம்பர்பெருமான் பாடியது போலவே பல்லாயிரம் பெருமக்கள்பாடி இப்பிரபந்தங்களை வேதங்களோடொப்பவும் வேதங்களுக்கு மேற்படவும் போற்றியிருக்கின்றார்களென்பது.

(7) வேதங்கள் பாஞ்சராத்ரங்கள் இதிஹாஸங்கள் புராணங்கள் முதலான ஸகல சாஸ்திரங்களிலுமுறையும் பொருள்கள்யாவும் இப்பிரபந்தங்களில் பொதிந்துகிடக்கின்றன வென்பதைப் பேராசிரியர்கள் ஆச்சரியமாகப் பன்னி யுரைத்திருக்கின்றார்களென்பது.

ஆக இப்படிப்பட்ட பலவகைப் பெருமைகளை எண்ணுந்தோறும் புறமதத்தவர்களுக்குப் பொறுமையல்லது வேறு என்னவுண்டாகமுடியும்? தாங்கள் கொண்டிருக்கும் பிரபந்தங்களுக்கு ஒரு புண்யவானும் உரையியற்றப் புகவில்லை. வடமொழி வேதங்களைப்பயிலும் அந்தணர்கள் அப்பிரபந்தங்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேனென்கிறார்கள். இது அந்நாள் தொடங்கி இந்நாள்வரையில் ஒரேவிதமாகவேயிருக்கின்றது. யாரோ சிலர் கைக்கொண்டிருக்கிறார்களே தவிர பிராமணஜாதியிற்பிறந்த வொருவரும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லையே. ஒரு ஆலயத்தி

லும் ஒரு மடத்திலும் ஒரு கிருஹத்திலும் அப்பிரபந்தங்களைப் பேணுவாரில்லையே. அவற்றைப் பாடியவர்களுக்கு ஒருவிதமான மதிப்பும் ஓரிடத்திலும் காணவில்லையே. அவற்றைக் கண்டபாடஞ்செய்து திருவிழாக்களில் திரளாக விருந்து ஓதுவாரில்லையே. கம்பர் பெருமான் போன்ற கவிச் சக்ரவர்த்திகளும் பக்த சிகாமணிகளும் அவற்றைப்பற்றி வாய் திறக்கவேயில்லையே. அவற்றில் ஒரு சுவைப்பொருளையும் எறிட்டுரைக்கவும் முடியாமலிருக்கிறதே. ஒரு சாஸ்த்ரார்த்தமும் அவற்றில் இல்லையே. சாஸ்த்ரார்த்தமறியுமாற்றல் பெற்ற மெய்ஞ்ஞானியரும் மாஞானியரும் கண்ணெடுத்தும் பாராதவவற்றில் என்ன சாஸ்த்ரார்த்தமிருக்க முடியும்.

இந்நிலைமை பெற்றிருக்கின்ற அப்பிரபந்தங்களின் தன்மையையும் ஆழ்வார்களது திவ்வியப் பிரபந்தங்களின் ஒப்புயர்வற்ற பெருமைகளையும் உன்னுந்தோறும் வயிறுருகி நிற்கும் மாச்சரியமூர்த்திகள் தங்களுடைய மாச்சரியத்திற்கு ஒருவிதமான போக்குவீடு செய்தாகவேண்டுமே. அது செய்து விட்டார்களிப்போது. வைணவப்பகையே வடிவெடுத்து அதற்கு முரணுக வைணவப் பெயரையே தாய்தந்தையரால் இடப்பெற்றவொரு முதலியாரைக் கொண்டு திவ்யப்பிரபந்த வுரையாசிரியர்களைத் தமிழறியா மக்களென்று மனம் போனபடியெல்லாம் நிந்தித்து "திவ்ய ப்ரபந்தமும் திவ்யார்த்த தீபிகையும்" என்னுமோர் அபத்தப் புத்தகத்தை வெளியிடுவித்துள்ளார்கள்.

"நாலாயிரத் திவ்யப்பிரபந்த வுரையாசிரியரான பெரியவாச்சான் பிள்ளையும், நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்குச் சிறப்பாக வியாக்கியானங்களிட்டருளின திருக்குருகைப்பிரான் பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை வாதிகேசரிச்சீயர் முதலானுரும் ஆரியம்கற்றவர்களேயொழியத் தமிழ் கற்றவர்களல்லர்; அவர்கள் ஆழ்வார் பிரபந்தங்களுக்கு உரை செய்யவுரிமையுடையவர்களல்லர்; ஆழ்வார்களது திருவாக்கில் வெளிவந்த பாடங்களை இவ்வாசிரியர்கள்

தங்களுடைய அறிவின்மையினால் மாறுபடுத்தியே பெரும் பாலும் உரைசெய்து விட்டார்கள்" என்றிப்படிப்பட்ட [எடுத்துக் கழிக்கவுந்தகாத] தூஷணைகளைப் பெய்து வெளியிடப்பட்டிருக்கின்ற அச்சிறுசுவடியில், அறிவுடையார் உகக்கத்தக்க விஷயம் ஒன்றாவது இருக்குமோ? எப்படியிருக்கமுடியும்?

78382

அச்சுவடி ஆராய்ச்சிசெய்துள்ள விஷயங்களில் முதல் விஷய மொன்றேபோதும் மூதறிவாளர் உண்மை யுணர. "திருமாலையறியாதார் திருமாலையறியாரே" என்னும்படியான பெருமைவாய்ந்த (தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச் செய்த) திருமாலையென்னுந் திவ்வியப்பிரபந்தத்தில் "குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டோடித் தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாவணிலும் போலேன்" என்னுஞ் செய்யுள் யாவருமறிந்ததேயன்றோ. "அணில் ஸேவை மணல் ஸேவை" என்கிற பழமொழியையும் பேரறிவாளர் அறிந்துள்ளார்கள். இராமாவதாரத்தில் திருவணை கட்டும் போழ்து அணில்கள் செய்த சிறு சேவையும் அடியேன் செய்யப்பெற்றிலேனந்தோ! என்று நைச்சியமாகப் பாடியுள்ள பாசுரமிது.

பொருமைமூர்த்தி முதலியார் இங்கு எழுதுகின்றார்.— இப்பாட்டில் அணிலைப்பற்றின பேச்சே கிடையாது; அணில் சேவை செய்ததாக ஒரு புராணத்திலுங்கிடையாது. அக்கதையை ஆழ்வார் நெஞ்சாலும் நினைக்கவில்லை. வணிலம் என்பதே ஆழ்வார் திருவாக்கிற்போந்த பாடம். வள் நிலம் என்று பதம் பிரியும். முதலடியில் நூக்க என்பது பாடமன்று. தகர நகரங்களுக்கு அதிகமான வாசி தெரியாததலால் தூக்க என்றிருந்ததை 'நூக்க' என்று மயங்கி வாசித்து விட்டார்கள். மேலும், குளித்து என்பது பாடமன்று; குனித்து என்பதே பாடம்......இப்படி மனம் போனபடியெல்லாமெழுதியுள்ளார். இப்படிப்பட்ட அதிகப்பிரசங்கங்கள் நகைச்சுவைக்கு இடமாகுமேயன்றி வேறன்று. இவர்க்கும் இவரைப்போன்ற மற்றுமுள்ள

Q22:41
N49

பொறுமையாளர்க்கும் தத்துவமொன்று உணர்த்துவோ மிங்கு. வடமொழி வேதங்களை எப்படி ஒருவரும் ஏடு பார்த்துக் கற்பதில்லையோ அப்படியே இத் தமிழ்வேதமும் யோகதசையிலே ஸாக்ஷாத்காரம் தந்தருளின நம்மாழ் வாரிடத்து [" நாதனுக்கு நாலாயிர முரைத்தான்வாழியே " என்று அன்றே தோன்றிய வாழித் திருநாமத்தின்படியே] உபதேசம் பெற்ற ஸ்ரீமந் நாதமுனிகள் வழியாய் அத்யயன பரம்பரையிலேயே பாடமாகி வருகின்றது. ஏட்டில் தகரத்தைப்பார்த்து நகரமாக மயங்கிவிட்டார், ளகரத்தைப் பார்த்து ளகரமாக மயங்கிவிட்டார் என்கிற அனுமானச் சொற்களுக்கு இங்கு இடமே கிடையாது. இக்காலத்தில் அச்சுப்புத்தகங்களைப்பார்த்துப் பாடஞ் செய்வாரும் அறிவிலிகளிடத்தே ஓதிக் கற்பாரும் சிலருளர்; இவர்களது வாக்கில் பாடப் பிறழ்வுகள் பலபலவுண்டென்பதை யாரும் மறுக்ககில்லார். ஆளவந்தார் ஸ்ரீராமாநுஜர் கூரத்தாழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை பெரியவாச்சான் பிள்ளை போன்ற முன்னோர்கள் நல்லாசிரியர் பரம்பரையிலேயே நன்றாக வோதி யுணர்ந்தவர்களாதலால் அவர்கள் ஏடு பார்த்துப் பாடங்களைத் தவறாகக் கொண்டு விட்டார் களென்று கூறுவது வெறும் பொறுமைப் பேச்சேயாகும்.

அப்படி அவர்கள் தவறாகக் கொண்டு விட்டார் களென்றே வைத்துக்கொள்வோம். அந்தத் தவறுகளே தான் உலகுக்குத் தஞ்சம். வேதங்களுக்கு பாஷ்யஞ் செய்த மஹான்கள் தவறாக எழுதிவைத்தார்களென்று ஒருவர் நிரூபிக்கவேணுமானால், உலகமெங்கும் ஒருமிடறாக ஓதப்பட்டு வருகின்ற பாடங்களை மாறுபடுத்தித் தான் தோன்றியாகப் புதிய கோணற்பாடங்களைக் கற்பனை செய்து, 'இப்பாடமறியாமல் பாஷ்யகாரர் தப்புப் பொருள் வரைந்திட்டார்' என்று பழிப்பது பேதையர்களின் பணியேயன்றோ.

வழங்கிவரும்பாடத்தைச் சிறிதும் மாறுபடுத்தாமல், 'அதற்கு இன்னமுஞ் சுவைப்பொருள் கூறுகின்றேன்

யான்' என்று ஒருவர் கூறத் தலைப்பட்டால் அக்கூற்றைச் சிலர் செவியேற்கவுங்கூடும். அவ்வழியிற் செல்லாது, இன்சுவைப்பொருள்மிக்க பரம்பரைப்பாடங்களை சுயேச்சையாக மாறுபடுத்தி, காதால் கேட்கவுந்தகாத அவத்தப் பாடங்களை அவரவர்கள் தம் தம் புல்லறிவைக்கொண்டு கற்பனை செய்து, அவற்றில் ஏதோ சுவையிருப்பதாகத் தாங்கள் மருண்டிருப்பதுபோல உலகததையும் மருட்ட விரும்பி இவ்வபத்த பாடங்கள் பூருவாசாரியர்களுக்குப் புலப்படவில்லை யென்று சிறிதும் கூச்சமில்லாமல் எழுதுகின்றவர்கள் எத்தனைவர் தோன்றினாலும் முன்னோர்களது ஞானப்பெருமைக்கு ஒரு குறையும் வாராது.

தமிழ் நூல்களுக்கும் தமிழ் வழக்குக்களுக்கும் இணங்கவே வியாக்கியானம் செய்தாகவேண்டுமென்கிற நிர்ப்பந்தத்தைத் தமிழ் வேதத்திலே கொண்டு கூட்டியுரைப்பது ஏற்கத்தக்கதன்று. வடமொழி வேதத்தில் காண்கிற பல பல சொற்களுக்கு வடமொழி வியாகரணப்படி பொருள் கூறும் நிர்ப்பந்தத்தைச் சிறிதும் வைத்துக் கொள்ளாமல் வேதபுருஷனுடைய கருத்தைப் பரம்பரையாலுணர்ந்து பாஷ்யங்கள் செய்திருக்கிறவிதம் இவர்களுக்குத் தெரிய விரகில்லை. அப்படிப் பல சான்றுகள் காட்டிப் பெரியார் விவரித்தருளியுமிருக்கிறார்கள். செந்தமிழாராய்ச்சி முதலிய நூல்களில் அவை காணத்தக்கன.

திவ்வியப்பிரபந்தப் பாடங்களையும் பொருள்களையும் மாறுபடுத்தி வெளியிட விருப்பமுடையார் தங்கள் கருத்தின்படி தனியே மூலப்பதிப்பும் உரைப்பதிப்பும் யதேஷ்டமாகச் செய்து கொள்ளலாம். வீணாகப் பேராசிரியர்களைப் பழித்துப் பாதகிகளாகப் பார்ப்பது நலமன்று.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான வைணவப் பேராசிரியர்களைப் பலவாறு பழித்து எழுதுமிவர்கள் இக்காலத்து வைணவப்புலவர்களின் மதிப்புரைகளைப் பெற விரும்பினதும் இவ்விருப்பத்திற்கு அன்ன சிலர் உடன்படுவதும் வெகு ஆச்சரியம். பூருவாசாரியர்களையே

பழித்து எழுதினல் மதிப்புரை எளிதாகக் கிடைக்காதென்றும், ஸ்ரீகாஞ்சீபுரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின் உரைகளின்மீது குற்றங்குறைகள் கூறி யெழுதிவிட்டால் அவ்வாசிரியரிடத்துப் பகையும் பொறாமையுங் கொண்டிருக்குமவர்களிடமிருந்து மதிப்புரைகளை எளிதில் பெற்று விடலாமென்றுங் கருதிய தூஷக முதலியார் அப்பேராசிரியருடைய உலகம் போற்ற நின்ற உரைகளைப் பழிப்பதாகக் காட்டிக்கொண்டு ஆங்காங்கு மதிப்புரை பெறத் திரிகின்றூர். 'ஏதேனுமொரு புத்தகத்தில் நம்முடைய பெயர் எவ்விதமாகவாவது விளங்கினல் போதும்' என்று நப்பாசை கொண்டிருக்கும் சிலர் "நாய்களின் பாட்டுக்கு நரிகளின் தாளம்" என்கிற கதையாய்த் தாளம் போட முன்வருகிறூர்கள். கதிரவனுக்குக் காந்தியில்லையென்றெழுதி எழுத்து வாங்குகிற மேதாவிகள் பலருண்டே; அவர்களது வகுப்பிற் சேர்ந்தவர்களேயன்றூ இவர்களும். தமையனை விதவாபுத்திரனென்று வசை கூறினவர்களோடு தம்பியும் சேர்ந்து அந்தச் சொல்லையிட்டே பழிப்பதுபோல இவர்கள் செய்வதெல்லாம் அசூயாதேவியின் ஆலிங்கனவைபவமே யென்பதைப் பண்டே இராமநாதபுரம் சேதுபதி ஸம்ஸ்தான மகாவித்வான் இராகவையங்கார் சுவாமிகள் வெளியிட்டுள்ளார்;

ஷை இராகவையங்கார்ஸ்வாமியின் திருவாக்கு வருமாறு:—

"ஸ்ரீகாஞ்சீநகரத்து ஸ்ரீவைஷ்ணவ பரமாசார்ய குலதிலகராகவும் உபயவேத வேதாந்த வித்வத்சிகாமணியாகவும் விளங்குகின்ற ஸ்ரீபிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளால் இனிது இயற்றப்பெற்றுள்ள திவ்யார்த்த தீபிகையென்னும் பெரியநூலை யான்பலநாளாகப் படித்துப் பார்த்துள்ளேன். நம் பூருவாசாரியர்கள் அருளிச்செய்த வியாக்கியானங்கள் அறிதற்கரியனவாய் அதிகவடமொழிக் கலப்புடையனவாயிருத்தலைநோக்கி நம்தமிழ்மக்கள் எளிதினுணர்ந்துகொள்ளும் வண்ணம் இனியதமிழ் நடையில்

நூற்பொருளை நன்கு விளக்கி இவ்விரிவுரை நிற்றலைக் கண்டு நாடோறுங் களிபேருவகையடையா நின்றேன்.

இவ்வாசிரியரது உரைநடை வடமொழி தென்மொழி களில் இவர்கட்குள்ள அரிய பெரிய பயிற்சியையும் நுணு கிய ஆராய்ச்சியின் திறத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது. தமிழ்வல்லுநர் பலர் இவ்விரிவுரையைக்கற்று மிகவும் அன்பு கூர்ந்து பாராட்டுதலையும் யான் பல வூர்களிற் கண்டுளேன். இவ்வினிய தமிழ் விரிவுரையின் பெருந்தகுதியை நோக்கி இவரை திவ்யப்ரபந்தப் பேராசிரியர் என்றே சிறப்பித்துக் கூறுவேனெனின், அது கற்றூர்பலர்க்கும் உடன்பாடே யாம். இருமொழிப் புலமையும் நூற்கடலாழ் பொருள் களைப் பிறர்க்கெடுத்துரைக்கும் வன்மையும் பாஷ்யம்போல நூல்கட்கு விரிவுரை யெழுதுந்திறனும் கவியியற்றும் பெற் றியும் இவ்வாசிரியர்பால் நிறைந்து விளங்குகின்றன.

இவர்கள் செய்துவரும் இவ்வரிய வித்யாதானத்திற் குப் பெருநன்றி பாராட்டுதல் கடப்பாடேயாகவும் அங்ஙன மில்லாது பொறுமையால் ஏலாதகுறைகளையேற்றி இழிக் கப் புகுவாருளராயின் அச்செயல் அவர் உளக்குறைபாட் டைப் புலப்படுத்துவதன்றி வேறாகாது. இத்தகையபெரி யார் இன்னும் பல அறிவுவிளக்க நூல்களை இயற்றி உல கிற்கு உபகரித்து நீடூழி வாழுமாறு பரதெய்வத்தின் திரு வருளைப் பிரார்த்திக்கின்றேன்." ... . *

இங்ஙனம் எழுதியுள்ள இராகவையங்கார் சுவாமிகள் முடிவில் எழுதியுள்ள அருமையான வார்த்தைகளை மறு படியும் எடுத்துக்காட்டுகிறேன்—"இவர்கள் செய்துவரும் இவ்வரிய வித்யாதானத்திற்குப் பெருநன்றி பாராட்டுதல் கடப்பாடே யாகவும் அங்ஙனமில்லாது பொறுமையால் ஏலாத குறைகளை ஏற்றி இழிக்கப்புகுவாருளராயின் அச் செயல் அவர் உளக்குறைபாட்டைப் புலப்படுத்துவதன்றி வேறாகாது" என்று அப்பெரியார் எழுதியிருப்பது, இப் போது முன்வந்திருக்கின்ற முதலியாரைப்போன்ற பொறு மையாளர்கள் முக்காலத்து முளரென்றறிந்தேயன்றோ.

ஆதலால், பூருவாசாரியர்களின் வியாக்கியானங்களைப்பற்றியோ ஸ்ரீமத்ஸ்வாமிகளின் திவ்யார்த்த தீபிகையுரையைப் பற்றியோ யார் எத்தனை குற்றங்குறைகள் கூறினலும் எழுதினலும் தாம்மிரசாசனம் சிலாசாசனம் செய்து வைத்தாலும் இவையித்தனையும் பெரும் புகழாய்த் தலைக்கட்டுமேயல்லது அணுவளவும் பழிப்பாகாதென்பது அறிஞருடைய நினைவில் நிச்சலுமிருக்கும்.

புகழுடம்பினராய்ப் பொலிகின்ற மகாமகோபாத்யாய. தாக்ஷிணாத்ய கலாநிதி. சாமிநாதையரவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகள் இயற்பாவாயிரத்திற்கெழுதி வெளியிட்டிருந்த திவ்யார்த்த தீபிகையுரையின் அருமை பெருமைகளை அதிகமாக வனுபவித்து ஆனந்த முள்ளடங்காமல் (17-6-32-ல்) எழுதி வெளியிட்ட மதிப்புரையின் முடிவிலுள்ள வார்த்தைகளுக்கு இம்முதலியாரவர்களே முழு நோக்கென்பது இப்போது விளங்கிற்று. புத்தகங்களுக்கு விளம்பரஞ் செய்யும் முறைமைகள் பலவுண்டே; அவற்றுள் மிகச் சிறந்த முறைமையை முதலியார் கடைப்பிடித்தாரென்பது தேறிற்று. அதாவது, ஸ்ரீமத் ஸ்வாமிகளின் அரிய பெரிய உரைநூல்கள் இன்னமும் உலகமெங்கும் பரவுதற்கே இவர் விளம்பரஞ் செய்தபடியாமென்க.

இன்னமும், பலவாண்டுகட்கு முன்பு மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்த மதிப்புரையையும் ஈண்டெடுத்துக் காட்டுதும்;—"திவ்யப்பிரபந்தங்கட்கு திவ்யார்த்ததீபிகை என்னும் பெயரால் ஒரு தமிழுரை, காஞ்சீபுரம் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளால் எழுதப்பட்டுப் பதிப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வுரையாசிரியர் இளமைப்பருவம் பொருந்தியவராயினும் வடமொழியிலும் தென்மொழியிலும் தெளிந்த ஞானம் பெற்று சாஸ்திர ஸம்ப்ரதாயங்களையும் களங்கமறக் கற்று உபந்யாஸ வகையிலும் தேர்ச்சி பெற்றுள்ளாரென்பதை யாம் ஆராய்ந்துணர்ந்துளோம். அன்றியும் இவர் தம்முடைய புலமை

யினும் பலரும் பயன் பெறுமாறு பல நூல்களை யெழுதி வெளியிட்டு வருகின்றார். ஸம்ஸ்கிருத பாஷையிலும் திராவிட பாஷையிலும் வியாக்கியானங்கள் உபந்யாஸங்கள் முதலியவை யெழுதுவதில் இவர் மிக்க வல்லமை பெற்றிருக்கின்றாரென்பது இவர் வெளியிடும் கிரந்தங்களால் வெளியாகின்றது. ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கு இவரால் எழுதி அச்சிடுவிக்கப்பட்டு வருகின்ற திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை என்னும் தமிழுரையை நோக்குங்கால் இவர் சேந்தமிழ்ச் செல்வர் என்னும் சிறப்புப் பெயர் பெறுதற்குரிய ரென்பது தெற்றென விளங்கும். இவ்வுரையில் பிரதி பதார்த்தம், தாத்பரியார்த்தம், விசேஷார்த்தம், ஸ்வாபதேசார்த்தம், இலக்கணக்குறிப்பு முதலியவை மிகவும் எளியதாயுந் தெளிவாயுமுள்ள நடையில் எழுதப்படுகின்றன. மிக்க ஆராய்ச்சியுடன் எழுதப்படுகின்ற இவ்வுரை ஸம்ஸ்கிருதத்தில் மிகப் பயிற்சியில்லாத தமிழர்களும் பொருளுணருமாறெழுதப்பட்டிருத்தலால் ஆத்திகர் அனைவர்க்கும் இது ஆவச்யகமேயாம்.''

இப்படிப் பல பெரியார் போற்றிப் பொறித்துள்ளவற்றை உலகம் மறவாமல் அடிக்கடி அநுசந்தானம் செய்யுமாறு செய்வதற்கே முதலியார் போன்ற மூதறிவாளர்கள் முன்வருகின்றார்களென்பதில் ஐயமுண்டோ? முதலியாருடைய நிந்தனைகளில் முடிவான நிந்தனை இது காண்மின்; ஸ்ரீஸ்வாமிகள் 1914 வருஷத்தில் அச்சிட்ட பெரியாழ்வார் திருமொழியுரையின் முகவுரையில் "புகழ்தருமறைக்கு மேலோன் புடார்ச்சுனபுரத்தின் மேன்மை" என்றொரு செய்யுளை மேற்கோள் கொடுத்து எழுதியிருக்கிறார்களாம். அந்தச் செய்யுள் ஒரு சைவப்புலவர் செய்ததாம்; வைணவப் புலவரான ஸ்வாமிகள் சைவப்புலவருடைய செய்யுளை மதித்து எழுதியிருப்பது வெறுக்கத்தக்கதாம். இதுவொரு பெரிய தூஷணையாகக் கிடைத்திருக்கிறது இவர்க்கு. இங்கு இவர் தெரிந்துகொள்ளவேண்டியதைத் தெரிவித்து இக்கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறோம்;

300 வருஷங்களுக்கு முன்பு அப்பயதீக்ஷிதரென்றொரு மகாபண்டிதர் விளங்கியிருந்தார். அவர் வீரசைவர்; வைணவத்வேஷி. அப்படிப்பட்டவர் ஸ்ரீராமாநுஜபாஷ்யத்தைத்தழுவி நயமயூகமாலிகா என்றொரு பிரமசூத்திரவுரை யெழுதி "லக்ஷ்மணார்யஹ்ருதயாநுஸாரிணீ ரச்யதே நயமயூகமாலிகா" என்று தலையில் சுலோகமும் பொறித்துள்ளார். அதைத்காட்டிலும் தகாததன்றேயிது.

பொறுமையும் பகையுமே உருக்கொண்ட முதலியாரவர்களது கந்தைச் சுருளையைப்பற்றி இவ்வள வெழுதினதே அதிகம். ஸ்ரீஸ்வாமிகளின் திவ்யப்பிரபந்த திவ்யார்த்த தீபிகையுரைக்குப் பிரபல அட்வெர்டைஸ்மெண்டாக அமைந்த இவருடைய நிந்தனைப் புத்தகம் திசைதொறும் பரந்து நீடுழிநிலவுக.

இங்ஙனம்

M. பார்த்தசாரதி

நாட்டுப்பிள்ளையார் கோவில் தெரு,

மதராஸ். 9-5-49

78382

PREMA PRESS, MADRAS